Annual Subscription Rs.100/-

# திருமறை ஆசான்


புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 35 இதழ் - 2 பிப்ரவரி - 2022

தனிப்பிரதி ரூ.10/-



சர்வதேச தரத்தில், தலை சிறந்த
பிரசங்கிகளால் எழுதப்பட்ட
**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
– ஆசிரியர்



















## ஆசானின் அறிவுரையிலே ...

| | |
|---|---|
| நிறுவன ஆசிரியர் உரை | 3 |
| மதத்தின் பெயரால் ஜனங்கள் ... | 9 |
| பெண்கள் பகுதி | 13 |
| வாலிபர் பகுதி | 16 |
| சிறுவர் பகுதி | 19 |
| பிரிவினையில் தேவன் ... | 21 |
| யார் இந்த பேலியாளின் ... | 25 |
| இடறல்கள் | 28 |
| கிறிஸ்து என்னும் மார்க்கம் ... | 33 |

- ஒன்றுக்கும் மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.
- முகவரி மாற்றத்தைக் கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.
- இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு தெரியப்படுத்தவும்.
- அஞ்சல் வழியில் வேதாகமம் படிப்பவர்கள் உங்களது தொலை / அலைபேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தை தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்.

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 35 February - 2022 Issue - 2


நிறுவன ஆசிரியர் உரை

## ஐக்கியத்துக்காக இயேசுவின் ஜெபம் (யோவான் 17:11,20-23)

தற்காலத்தில் கிறிஸ்தவர்களிடையே காணப்படுகிற பிரிவினைகள் பற்றியும், அதைப் பற்றி யாருமே கண்டு கொள்ளாதது பற்றியும் நினைக்கும் போது, இவைகளையெல்லாம் கர்த்தர் அங்கீகரித்துக் கொண்டார் என்ற எண்ணம் மக்கள் மனதில் ஏற்பட்டு விட்டதோ என்று சந்தேகப்பட வேண்டியதாயிருக்கிறது. அப்படியானால், யோவான் 17:11,20-23 ஆகிய வசனங்களில் நாம் வாசிக்கிற இயேசுவின் உருக்கமான ஜெபத்துக்கு என்ன பொருள்?

சுமார் ஆறு கேள்விகள் கேட்டு, இந்த ஜெபத்தின் பொருளைக் கண்டு பிடிக்க முயல்வோம்.

**1. இயேசு ஐக்கியத்தை விரும்புகிறாரா?**

இந்த ஜெபத்தில் காணப்படுகிற சொல்லாட்சியைக் கவனிக்கும் போது ஆம் என்றே சொல்லத் தோன்றுகிறது. இயேசு ஐக்கியத்தை அவ்வளவு பெரிது படுத்தவில்லை என்போமானால் பின் ஏன் அவர் இவ்வளவு உருக்கமாக எல்லோரும் ஒன்றா யிருக்க வேண்டும் என்று மன்றாடி ஜெபிக்க வேண்டும்?

பழைய ஏற்பாட்டிலும் சரி, புதிய ஏற்பாட்டிலும் சரி, எப்பொழு தெல்லாம் பரலோக இராஜ்ஜியத்தைப் பற்றியும் யெகோவாவின் ஆலயமாகிய வீட்டைப் பற்றியும், சபையைப் பற்றியும் குறிப்புகள் காணப்பட்டாலும் அவைகள் எல்லாமே ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் வண்ணம் ஒருமையிலேயே சொல்லப் பட்டிருக் கிறதை கவனியுங்கள். யெகோவாவின் ஆலயமாகிய

பர்வதம் (ஏசாயா 2:2) தேவனுடைய வீட்டிலே, ஜீவனுள்ள தேவனுடைய சபை சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமும் (1 தீமோ. 3:15) என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்ஜியம் (தானி. 2:44) இங்கே நிற்கிறவர்களில் சிலர் தேவனுடைய இராஜ்ஜியத்தை (மாற்கு 9:1), என் சபையைக் கட்டுவேன் என்று இப்படியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது (மத். 16:18).

அது அல்லாமல் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசிய பரிசுத்த மனிதர்களின் மூலமாக இயேசு தம்மை விசுவாசிக்கிறவர்களின் ஒற்றுமைக்காக மன்றாடுகிறார். சகோதரரே, நீங்கள் எல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏகமனதும், ஏக யோசனையும் உள்ளவர்களாய் சீர் பொருந்தியிருக்கவும் வேண்டும் என்று நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன் என்கிறார் பவுல் (1 கொரி. 1:10).

இப்படிப் பிதாவும், குமாரனும் ஒருவருக்கொருவர் இணக்கமாகச் செயல்படுகிறார்கள். தேவத்துவத்துக்குள் இம்மியேனும் வேற்றுமையின் நிழலைக் காண முடியாது. அதைப் போன்ற ஒரு ஐக்கியம் அவருடைய உபதேசங்களைக் கேட்டு விசுவாசிக்கிற மக்கள் மத்தியில் இருக்க வேண்டும் என்று மன்றாடுகிறார்.

இங்கே, தேவன் ஒற்றுமையை எந்த அளவுக்கு வலியுறுத்துகிறார் என்று கவனியுங்கள். ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினையில்லாமல் ஏக யோசனையுள்ளவர்களாய் சீர் பொருந்தியிருக்கவும், அறிவுரை கூறி விட்டு 13-ம் வசனத்தில் கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? என்று சிந்தையைத் தூண்டும் ஒரு கேள்வியையும் கேட்கிறார். இவைகளையெல்லாம் சீர்தூக்கிப் பார்க்கிற எந்த மனிதனும் கிறிஸ்து பிரிவினையை அங்கீகரிக்கிறார் என்ற கூற்றை நம்பவே மாட்டான்.

**2. எந்த அளவுக்கு விசுவாசிகளின் ஒருமைப்பாட்டை கோருகிறார்?**

அவர்கள் எல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறது போல அவர்கள் எல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்கிறேன் என்று ஜெபிக்கிறதை கவனியுங்கள். யெகோவாவின் ஆலயமாகிய பர்வதம் (வச. 21) என்று ஜெபித்தார். பிதாவுக்கும், குமாரனுக்கும் ஒற்றுமையின் நெருக்கத்தை விளக்குவதற்கு வார்த்தைகளே கிடையாது. பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவது உணவை விட முக்கியமானது என்கிறார். (யோவான் 4:34).

எனக்குச் சித்தமானதைத் தேடாமல் என்னை அனுப்பின பிதாவுக்குச் சித்தமானதையே நான் தேடுகிறேன் என்று கூறி, தான் பிதாவின் மேல் கொண்டிருக்கிற மதிப்பையும், ஐக்கியத்தையும் பறைசாற்றுகிறார் [யோவான் 5.30].

என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்து இறங்கி வந்தேன் எனத் தாழ்மையாகவும், தந்தையின் விருப்பத்துக்கு இசைவாக நடப்பதற்குமே வந்தேன் என்று தன் பூலோக வருகைக்கான காரணத்தைச் சொல்லுகிறார் [யோவான் 17:4].

பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன் நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த பணியைச் செய்து முடித்தேன் என்று அடக்கத்தோடு சொல்லுகிறார். [யோவான் 17:4].

**3. இந்த ஒற்றுமை சாத்தியமா?**

தேவனும், கிறிஸ்துவும் ஒன்றாயிருந்தது போல மானிடர் களாகிய நாம் ஒன்றாய் இருப்பது சாத்தியமில்லை என்று பலர் ஆயாசப்படுகின்றனர். அப்படிப்பட்டவர்கள் ஒன்றைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நம்மைப் போலவே இயேசுவும் நினைத் திருந்தால், ஏன் ஒருமைப்பாட்டை வலியுறுத்தி உருக்கமாக ஜெபித்தார்? ஏன் பரிசுத்த மனிதர்களைக் கொண்டு ஒற்றுமையைப் பற்றி எழுதச் சொன்னார்? நமக்குத் தெரிந்தது ஆண்டவருக்கு தெரியாமற்போயிற்று என்று நினைக்கலாமா? நடக்க முடியாத ஒன்றைத் தொடர்ந்து வலியுறுத்துவாரா? நிச்சயமாகமாட்டார்?.

ஆதி சபையிலே அது சாத்தியமாயிற்று என்றால் இன்று மட்டும் ஏன் முடியாது? வாசியுங்கள், விசுவாசிகள் எல்லாரும் ஒருமித்திருந்து சகலத்தையும் பொதுவாய் வைத்து அனுபவித் தார்கள் [அப். 2:44]. அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய் தேவாலயத்தில் அனுதினமும் தரித்திருந்து வீடுகள் தோறும்.

அப்பம் பிட்டு மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத் தோடும் போஜனம் பண்ணி .... [அப். 2:46] என்றெல்லாம் எழுதப் பட்டிருக்கிறது. மேலும் அப். 4:32ல் விசுவாசிகளான திரளான கூட்டத்தார் ஒரே இருதயமும், ஒரே மனமுமுள்ளவர்களாய் இருந்தார்கள் '' என்றும் வாசிக்கிறோம். இவைகள் எல்லாம் நமக்கு உணர்த்தும் உண்மை என்ன? விசுவாசிகள் ஒன்றா யிருப்பது சாத்தியம் என்பது தானே? ஆகவே, ஆதி சபை யார் செய்தபடி, உபதேசித்தபடி நாமும் செய்தால் இப்பொழுதும் ஒற்றுமையாக இருக்க முடியும்.

**4. இப்படிப்பட்ட ஒற்றுமைக்கு அடித்தளம் என்ன?**

விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும் [ரோமர் 10:17] என்று சொல்லியிருக்கிற படி தேவனுடைய வசனமே அவ்வித ஒற்றுமைக்கு அடித்தளமாக இருக்க முடியும். தேவனுடைய வசனம் ஒன்றுக்கொன்று முரண்படுகிறதா? நிச்சயமாக இல்லை என்று நாம் அறிவோம். தேவன் வெளிப்படுத்தின காரியங்களில் முரண்பாடு கிடையாது என்றும்; முரண்பாடுகளெல்லாம் மனிதன் அதைப் புரிந்து கொள்ளும் விதத்தில் தான் என்பதற்கு மத். 16:13–17 ஆகிய வசனப்பகுதிகள் ஓர் அருமையான உதாரணம். இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி, மனிதகுமாரனாகிய என்னைப் பற்றி மக்கள் என்ன கருத்துத் தெரிவிக்கிறார்கள் என்று கேட்டார். சிலர் எலியா என்றும், எரேமியா என்றும், தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றும் கருதுகிறார்கள் என்று கூறினர். இயேசு மீண்டும் அவர்களை நோக்கி, நீங்கள் என்னை யார் என்று கருதுகிறீர்கள் என்று கேட்டார். அதற்கு சீமோன் பேதுரு, நீர் உயிரோடிருக்கிற தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றார். அதற்கு இயேசு, அவரைப் பாராட்டி, யோனாவின் குமாரனாகிய சீமோனே! மாமிசமும், இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை பரலோகத்திலிருக்கிற என் தந்தையே இதை உனக்கு வெளிப் படுத்தினார் '' என்றார் [மத். 16:17]. மனிதருடைய எண்ணங் களையும், கருத்துக்களையும் கொண்டு ஆராய்ந்தால் ஆளுக் கொரு விதமான விடைகள் கிடைக்கும். ஆனால், தேவனுடைய வெளிப்பாட்டை அடித்தளமாகக் கொண்டு ஆராய்வோமானால் அங்கே பரிபூரண உண்மையும், ஒருமைப்பாடும் காணப்படும். மார்க்க சம்பந்தமான காரியங்களில் தேவனுடைய வசனங்களை மட்டும் ஏற்றுக் கொண்டு, மனித ஞானத்தை ஒதுக்கி விடுவோ மானால் அங்கே பிரிவினைக்கு இடமேயில்லை. தேவனுடைய வசனம் எப்போதும் முரண்பாடு இல்லாமல் ஒரே காரியத்தையே போதிக்கிறது.

**5. இயேசு ஜெபித்த ஒருமைப்பாட்டின் விளைவுகள் என்ன?**

இயேசு ஜெபித்த இந்த ஜெபத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட இடத்தில் நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக் கிறதுக்கு என்ற சொற்றொடர் காணப்படுகிறது. ஆதி சபை ஒற்றுமையாக இருந்தது என்று பார்த்தோம். அவர் களுடைய ஒற்றுமை விசுவாசத்தை ஊக்குவித்ததா? அல்லது விசுவாசத்தை பலவீனப்படுத்தியதா? நிச்சயமாகவே, இயேசு எதிர்பார்த்ததைப்

போலவே விசுவாசத்தைப் பெருகப் பண்ணிற்று. ஆதிச்சபை எருசலேமில் வெறும் 3000 பேரைக் கொண்டு தொடங்கிற்று [அப். 2:41]. அது வெகு விரைவில் 5000 மாகப் பெருகினது. [அப். 4:4] விசுவாசிகளின் கூட்டம் பெருகிற்று [அப். 6:1] தேவ வசனம் விருத்தியடைந்தது சீஷருடைய தொகை எருசலேமில் மிகவும் பெருகிற்று. ஆசாரியரில் அநேகரும் விசுவாசத்துக்குக் கீழ்ப்படிந் தார்கள் [அப். 6:7] இந்தப் பெருக்கத்துக்கு, விசுவாசிகளிடத்தில் காணப்பட்ட ஒற்றுமை உணர்வே முக்கிய காரணம். அவர் களுடைய ஒருமைப்பாட்டின் பலம், ஒரு நூற்றாண்டுக்கும் குறை வான காலத்தில் வானத்தின் கீழ் இருக்கிற சகல சிருஷ்டிக்கும் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட உதவிற்று. [கொலோ. 1:23] ஆம், இயேசு கூறியபடி விசுவாசிகள் ஒன்றுபட்டு உழைத்தனர். [அப். 8:4] அவர் காட்டின ஒற்றுமை உணர்வு உலகத்தாருக்கு இயேசுவின் மேல் விசுவாசம் வைக்க உதவியது. இன்றைக்குப் பல நூற்றாண்டுகளாக எத்தனையோ முயற்சிகள் மேற்கொண்டும் இந்தியாவின் மூன்று விழுக்காடு மக்களைக் கூட கிறிஸ்துவுக் குள் கொண்டு வரமுடியவில்லை. காரணம் என்ன? கிறிஸ்தவம் பல கூறுகளாகப் பிரிந்து ஒன்றுக் கொன்று முரண்பாடான போத னைகளைப் போதித்து மக்கள் மத்தியில் பிரிவினைகளை உண்டு பண்ணி, இயேசு கிறிஸ்துவை உலக இரட்சகர் என்ற உயரிய நிலையில் இருந்து கீழே தள்ளி, இருக்கும் எத்தனையோ கடவுள் களில் இவரும் ஒருவர் என்ற நிலைக்குத் தாழ்த்தி விட்டது.

6. **இந்த அவல நிலை நீங்க, நாம் என்ன செய்யப்போகிறோம்?**

இயேசுவை நேசிக்கிறேன் என்று சொல்லுகிற அனைவரும் உண்மையாகவே நேசிப்பார்களானால் அவருடைய கற்பனை களை கைக்கொள்ள வேண்டும் [யோவான் 14:15]. மனுஷ ருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதிக்கக் கூடாது [மத். 15:9]. அவருடைய கற்பனைகளைக் கைக் கொள்ளுகிற வர்கள் ஐக்கியத்தை அசட்டை செய்ய முடியாது. இயேசு ஐக்கிய த்துக்காக ஜெபித்தார். அவரைப் பின்பற்றுகிற நாமும் ஐக்கிய த்துக்காக ஜெபிக்க வேண்டும். இயேசு ஐக்கியம் வேண்டி பாடு பட்டார். அவரைப் போலவே நானும் ஐக்கியத்துக்காகப் பாடு படுவேன் என்று உறுதிமொழி எடுத்துக் கொள்ள வேண்டும். ஜெப மும், செயல்பாடும் ஒருங்கிணைந்தால் வெற்றி நிச்சயம். நெகே மியா நான்காம் அதிகாரத்தை வாசித்து தியானியுங்கள், பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் எருசலேமின் மதில்களை எண்ணி ஐம்பத்தி இரண்டு நாட்களுக்குள் கட்டி முடித்தார்கள், எப்படி?

## 7. ஒரு கையில் கத்தி, மற்றொரு கையில் சுத்தி

தேவனை நோக்கி ஜெபித்தார்கள். அதோடு நிற்கவில்லை. எதிர்ப்பை சமாளிக்க ஒரு கையில் வாளேந்திக் கொண்டு மறு கையினால் வேலை செய்தார்கள். நாமும் கூட ஒற்றுமைக்காக ஜெபிக்கவும், உழைக்கவும் வேண்டும். அத்துடன் தேவனுடைய வசனத்தை ஆராய்ந்து பார்த்து தெளிவு பெற வேண்டும். அதுவே ஒருமைப்பாட்டுக்கு அடித்தளம். மனித ஞானத்தை அடிப் படையாகக் கொண்டுள்ள எந்த உபதேசத்துக்கும் உடன்படவே கூடாது. அவைகள் தான் இயேசு ஜெபித்த ஐக்கியத்துக்கு சாவு மணி அடித்தவைகள். சிந்திப்பீர்! செயல்படுவீர்!..

**திருமறை ஆசான்** இதழின் நிறுவன ஆசிரியர் பக்திமிகு **எ.ச. செல்வநாயகம்** ஐயா அவர்கள் மறைந்து 29 ஆண்டுகள் நிறைவடைகிறது. அவர் நினைவாக அவர் எழுதின இக்கட்டுரை வெளியிடப்படுகிறது. – **ஆசிரியர்.**

---

### இயேசுவின் மரணத்தால் நடந்தவைகள்

- *யூதர்களையும், புறஜாதிகளையும் ஒப்புவாக்கினார் (எபேசியர் 2:16)*
- *பாவங்களை நிவர்த்தி செய்யும் கிருபாதார பலியானார் (I யோவான் 4:10)*
- *புதிய பிரமாணத்தை நிலைநிறுத்தும் படியாய், பழையதை மாற்றிப்போட்டார் (எபிரெயர் 9:15 - 17: மத்தேயு 26:28).*
- *சாத்தானின் வல்லமையை அழித்தார் ( எபிரெயர் 2:14: (I யோவான் 3:8)*
- *மரண பயத்திலிருந்த அனைவரையும் விடுதலையாக்கினார் (எபிரெயர் 2:15)*

## *மதத்தின் பெயரால் ஜனங்கள் செய்யும் காரியங்களை ஏன் செய்கிறார்கள்?*

Bro. J.C. **சோட்**

மதத்தின் பெயரால் தங்கள் முதுகில் காயங்களை ஏற்படுத்தி மார்பில் அடித்துக்கொண்டு இரத்தம் சொட்ட சொட்டத் தங்கள் கடவுள்களின் பெயரை உச்சரிக்கும் கூட்டத்தை நான் பார்த்தி ருக்கிறேன். இன்னும் சிலர் மிருக பலிகள் செலுத்துவதையும், எல் லாவிதமான சடங்காச்சாரங்களைச் செய்வதையும், மாடுகளை மரியாதை யாக வணங்குவதையும் கூட பார்த்திருக்கிறேன். அவ்வளவு ஏன், கத்தோலிக்கர்களும், ப்ரோடஸ்டன்ட்காரர்களும் ஒருவருக்கொருவர் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்துக் கொண்ட தன் மூலம், தேவனுடைய நாமம் வெகுவாகத் தூஷிக்கப்பட்டுவிட் டது. மதகாரியங்களுக்காக ஜனங்கள் ஏன் இப்படியெல்லாம் நடந்து கொள்கிறார்கள்? என்ற கேள்வி எனக்குள் எழுந்தது. அதற்கான பதிலாக, அவர்களுக்குத் தெரிந்ததெல்லாம் அவ்வளவு தான், அவர்கள் அவ்விதமாகத்தான் போதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றே எண்ணுகிறேன். அவர்களில் அநேகர் நேர்மையும் உண் மையுமுள்ளவர்களாயிருக்கிறபடியால், இவைகளையெல்லாம் செய்ய வேண்டுமென்ற நம்பிக்கையில் அவைகளையெல்லாம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

இங்கே பக்தியாயிருப்பது மாத்திரம் போதுமானதல்ல என்பதை நாம் முதலில் உணர வேண்டும். ஆம், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாட்களில் கூட பலர் மிகவும் பக்தியாயிருந்தார்கள். ஆனால், அவர்கள் காரியங்களைச் சரியாகச் செய்ய வேண்டு மென்பதற்காகப் பக்தியாய் இராமல் மனிதர்கள் காணவேண்டு மென்பதற்காகவே செய்தார்கள் (மத்தேயு 6). இன்னும் சிலர், தங் கள் மேலான வாழ்வுக்குச் சிறந்த வழி ஒன்றிருப்பதை அறியாம லேயே தங்கள் காரியங்களைச் செய்கிறார்கள் ( அப்போஸ்தலர் 17). மற்றும் ஒரு சாரார், தேவனுடைய உபதேசங்களைப் பின்பற்றுவ தற்குப் பதிலாக மனுஷருடைய உபதேசங்களைப் பின்பற்றுகிறார் கள் (மத்தேயு 7:21–23;15:9). மேலும், பலர் பொருளாதார நன்மைக ளுக்காகப் பக்தியாயிருக்கிறார்கள். இவ்வகையான மக்கள் கூலி யாட்கள் என்றழைக்கப்படுகிறார்கள் (யோவான் 10:12,13). இப்படி பட்டவர்கள், தங்களுக்கான கூலி கிடைக்கும் வரை யாரைப் பற்றி யும் கவலைப்படாமல், எந்த வேலையாக இருந்தாலும் செய்யக்கூ டிய மனோபாவம் உடையவர்கள்.

ஒருவர் தான் சார்ந்த மதத்தில் எவ்வளவு நேர்மையானவராக, உண்மையுள்ளவராக இருந்தாலும் சரி, அவர் பல காரியங்களை அறியாமையினால் செய்கிறார் என்பதே உண்மையாயிருக்கிறது. அப்படிப்பட்ட ஒருவர், தான் சார்ந்த மதத்தில் அல்லது மார்க்கத்தில் பிரயாசப்பட வேண்டிய ஒரு விஷயம் என்னவென்றால், அதிலுள்ள சத்தியம் அல்லது உபதேசம் உண்மையுள்ளதா என்பதைக் கண்டறிய வேண்டும். மார்க்க உலகில் சத்தியம் என்பது ஒன்றே ஒன்று தான் உண்டு. அது தனக்குள்ளே ஒரு போதும் முரண்படாது. ஒரு மனிதன் அதை முழுமையாக அறிந்து தன் வாழ்வில் பிரகாசமாய் செயல்படவேண்டும். (யோவான் 17:17;8:32) இப்படிப் பிரகாசமாய் செயல்படக்கூடியவர்கள் எல்லோரும் இணைந்து ஒன்றாகத் தேவனைஆராதிப்பார்கள். இப்படிச் செய்வது அவர்களுக்குள்ளே அறிவுப்பூர்வமாகவும், நியாயமாகவும், பிரயோஜனமாகவும் இருக்கும். இப்படிச் செய்வதின் மூலம் தேவன் கனப்படுத்தப்படுகிறார்.

நாம் எப்படி சத்தியத்தை அறிந்து அதைப் பெற்றுக் கொள்ள முடியும்? இதை நாம் தேவன் இருக்கிறார் என்பதை ஆதாரமாகக் கொண்டு ஆரம்பிக்க வேண்டும். இது தான் நியாயமானதாகவும், சரியான முடிவை ஏற்படுத்துகிறதாகவும் இருக்கிறது. சிருஷ்டிகர் என்பவர் இருந்தால், அவர் மாத்திரமே தேவனாக இருக்க முடியும். சிருஷ்டிகர் என்பவர் தான் தேவன் என்று எப்படி நாம் அவரை அறிந்து கொள்வது? அவருக்கென்று ஏதாவது சித்தமுண்டா? அவர் ஏதாவது பேசியிருக்கிறாரா? அவர் தம்முடைய விருப்பங்களை மனித இனத்துக்கு எப்படி வெளிப்படுத்தியிருக்கிறார்? அந்த தேவன் மனித இனம் எதைச் செய்யும்படி சொல்லியிருக்கிறார்? அதைக்குறித்து மனிதன் செய்ய வேண்டியது என்ன?

மனிதன் செய்ய வேண்டியது அந்த ஒரே தேவனையும், அவருடைய சித்தத்தையும் அறிந்து கொள்ள நாடுவதாகத் தான் இருக்க வேண்டும். உலகத்தில் அநேகம் புத்தகங்கள் உண்டு. ஆனால், நாம் தேவனிடத்திலிருந்து வந்த வெளிப்பாடாகிய வேதாக மத்தைச் சரியாக அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாயிருக்கிறது. எப்படியென்றால், மற்ற புத்தகங்களோடு ஒரு போதும் வேதாகமத்தை ஒப்பிடவே முடியாது. ஏனென்றால், மனிதனுடைய பிரச்சனைகள் அனைத்திற்கும் தீர்வாக அமைவது விவிலியம் மாத்திரமே. இந்த விவிலியம், சிருஷ்டிப்பைப் பற்றி, தேவனைப் பற்றி, மனித இனத்தின் ஆரம்பம் பற்றி மனிதனின் வீழ்ச்சி

பற்றி அதிலிருந்து மனிதன் எப்படி இரட்சிக்கப்பட முடியும் என்பதைப் பற்றி, மனிதனுடைய மரணத்திற்குப் பின்பு என்ன நடக்கும் என்பதைப் பற்றியும் மிகத் தெளிவாக விளக்குகிறது. உலகிலுள்ள புத்தகங்கள் அனைத்தையும் ஆராய்ந்தாலும், அவைகளில் கட்டுக் கதைகள் தான் அதிகமாக இழையோடியிருக்கும். இவைகளிலிருந்து வேறுபட்டு எல்லாப் புத்தகங்களுக்கும் மேலாக உயர்ந்துநிற்பது வேதாகமம் மட்டுமே. வேதாகமம் தான் அது வெளிபடுத்தப்பட்ட நாளிலிருந்து பல நூற்றாண்டுகளாக உலகிலேயே அதிகமான பேரால் வாசித்து கடைபிடிக்கப்படும் புத்தகமாகத் திகழ்கின்றது.

மதசம்பந்தமான காரியங்களில் மனிதனுடைய வார்த்தைகளுக்குச் செவி கொடுக்க வேண்டாம். ஏனென்றால், நீங்களே காரியங்களை விசாரித்துப் பாருங்கள், உங்களுக்கு நல்ல மனது இருக்கிறது நீங்கள் புத்திசாலிகள். உங்களால் காரியங்களைப் புரிந்து அறிந்து முடிவெடுக்க முடியும். ஆம், வேத வாக்கியங்களை நீங்களே மீண்டும் மீண்டும் படியுங்கள். வேத வசனங்கள் எதைப் போதிக்கின்றன என்பதைக் காண அவைகளை ஆராய்ந்து பாருங்கள் (யோவான் 5:39). ஒரு வேளை நீங்கள் மனிதர்களின் போதனை களைக் கவனித்தால், அவர்கள் போதனையோடு வேதாகமத்தின் போதனையை ஒப்பிட்டுப்பாருங்கள். அதை மாத்திரம் நீங்கள் நேர்மையாகச் செய்தால், அவர்கள் போதிக்கிறார்களா அல்லது தங்கள் சுக வாழ்வின் மேன்மைகளைப் பேசுகிறார்களா என்பதை நீங்கள் நிச்சயம் அடையாளங் கண்டு கொள்ள முடியும்.

தேவன் ஒருவரே, அவருடைய மார்க்கமும் ஒன்று தான், அந்த மார்க்கத்திற்கு வழிகாட்டின புத்தகமும் ஒன்றுதான், தேவனுடைய சித்தமும் ஒன்றுதான் என்பதை வேதாகமத்தின் பக்கங்களிலிருந்து மனிதன் ஏற்றுக்கொள்ளத் தொடங்கிவிட்டால், தற்போது செய்து கொண்டிருக்கிற காரியங்களை விட்டு விட்டு அவன் விவேகமான, நியாயமான, சரியான காரியங்களைச் செய்யத் தொடங்கி விடுவான். ஆம், சத்தியம் ஒரு மனிதனை விடுதலையாக்கும் யோவான் 8:32). சத்தியத்திற்கு ஒருவர் கீழ்ப்படியும்போது அது அவரை இரட்சிக்கும் ( I பேதுரு 1:2,23; மாற்கு 16:16) . மேலும், சத்தியம் உண்மையுள்ளவர்களுக்கு நித்திய ஜீவனின் நம்பிக்கையையும் கொடுக்கிறது (வெளி.2:10).

நீங்கள் சார்ந்திருக்கும் மத நம்பிக்கையில், பழக்கவழக்கங்களில் குருட்டாட்டமுள்ளவர்களாய் இருக்கவேண்டாம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அதற்காக நீங்கள் புதுமையாக வித்தியாசமாக இருக்க வேண்டுமென்று அவசியமில்லை இன்றைய நாட்களில் மதத்தின் பெயரால் செய்யப்படும் காரியங்களை நீங்கள் செய்ய வேடியதில்லை. அவைகளையெல்லாம் செய்யாமலேயே நீங்கள் பக்தியாக வாழ முடியும். இந்தக் காரியங்களையெல்லாம் நீங்கள் சிந்தித்து பரிசோதித்துப் பார்க்கும்படியாக உங்களைக் கேட்டுக்கொள்கிறோம். ஏனெனில், மார்க்க சம்பந்தமான காரியங்களில், நாங்கள் என்ன செய்ய வேண்டுமென்று தேவன் விரும்புகிறாரோ, அதைச் செய்யவே நாங்கள் விரும்புகிறோம். அப்போதுதான் நாங்கள் சரியானவர்களாக இருப்போம்.

தொடர்ந்து நாம் தேவனுடைய சித்தத்தைச் செய்யும் போது, ஒட்டு மொத்த உலகத்திலிருந்தும் வித்தியாசமானவர்களாக இருப்போம். அதாவது, நாம் வாழ்கிற, ஆராதிக்கிற, போதிக்கின்ற விதங்களில் நாம் மற்றவர்களிடமிருந்து முற்றிலுமாக மாறுபட்டு நல்லொழுக்கமுள்ள வாழ்க்கை வாழ்ந்து மற்றவர்களோடு எப்போதும் உண்மையை மாத்திரமே பேசுகிறவர்களாக இருப்போம். இப்படிப்பட்ட குணாதிசயங்கள் நம்மில் என்றென்றும் மிளிர நாம் தேவனை பணிவோடும், பக்தியோடும், விவேகத்தோடும் தொழுது கொள்ள வேண்டும்.

✝

---

## பாவம்

*தேவனிடத்திலிருந்து நம்மைப் பிரிக்கிறது.*

*நம்மை தனிமைப்படுத்துகிறது*

*சாபத்தக் கொண்டு வருகிறது*

*பாவம் நம்மை வெட்கப்படுத்துகிறது.*

*பயத்தையும், திகிலையும் உண்டாக்குகிறது*

*நம்பிக்கை இழக்கச் செய்கிறது*

*நித்தியத் தண்டனையைக் கொண்டு வருகிறது.*

பெண்கள் பகுதி

## யாருக்குத் தெரியும்?

Sis. ரேச்சல் இராஜநாயகம்

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே! இயேசுவின் நாமத்தினாலே உங்களுக்கு வாழ்த்துக்களையும் ஸ்தோத்திரங்களையும் ஏறெடுத்துக் கொள்ளுகிறேன். இந்த மாத கட்டுரையை எழுதும் போது அடியாளாகிய நான் அமெரிக்க ஐக்கிய தேசத்தில் இருக்கிறேன். வானமும், பூமியும் கர்த்தருடையது. சகலமும் அவருக்கே சொந்தம். அநேக காரியங்களை நான் இப்பொழுது கற்றுக் கொண்டிருக்கிறேன். தேவனுடைய வார்த்தைகளுக்கு அப்படியே கீழ்ப்படிய வேண்டும். முழு மனதோடு முழு ஆத்துமாவோடு முழு இருதயத்தோடு அன்பு கூற வேண்டும் என்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பூமியில் இருந்த போது கட்டளையிட்ட இந்த மகாப்பெரிய உண்மையை நாம் நம் வாழ்க்கையில் முழுமையாகக் கடைபிடிக்க கற்றுக் கொள்ள வேண்டும்.

இதைத் தொடர்ந்து உன்னிடத்தில் அன்பு கூருவது போல் பிறரிடத்திலும் அன்பு கூற வேண்டும் என்று கூறியிருக்கிறார். அன்புக்கு ஏன் தேவனும், இயேசு கிறிஸ்துவும் இவ்வளவு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள் என்பதை நாம் ஆழமாக யோசிப்பதே இல்லை. தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை கொடுத்து இவ்வளவாய் அன்பு கூர்ந்தார். (யோவான் 3:16). என்று வாசிக்கிறோம். ஏன் கொடுத்தார்? நாம் கொடுப்போமா? யோசிப்போம் ஒருவரும் கெட்டுப்போகக்கூடாது என்ற ஒரே நோக்கத்திற்காக கொடுத்தார். தம் சிருஷ்டிகளில் விசேஷமான அதிலும் தமது சாயிலாக படைத்த மனிதர்களிடத்தில் காட்டும் அன்பே தனிதான். இவ்வளவு அன்பான தேவன் தான் நம் தேவன். நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து யோவானிலே ஜெபம் பண்ணும்போது பிதாவே நானும், நீரும் ஒன்றாயிருப்பது போல் இவர்களெல்லாரும் ஒன்றாயிருக்க வேண்டும். அப்போது தான் உலகம் நம்மை அறிந்து கொள்ளும் என்று ஜெபித்தாரே அருமையானவர்களே நாம் எப்படி இருக்கிறோம்? நாம் அந்த நிலையை தொட்டுவிட்டோமா? எப்போது தொடப் போகிறோம்? முயற்சியெடுப்போம் இல்லாவிட்டால் அனைத்தும் வீணாய் போய்விடும்!

அன்பு என்று சொல்லும் போது தெய்வீக அன்பு. அகாபே என்ற கிரேக்கப்பதம் பயன்படுத்தப்பட்டுள்ளது. தெய்வீக அன்புக்கு இதன் பொருள் கொடுப்பது. எதை? நம்முடைய பக்தியுள்ள செயல்பாட்டை பிறருக்கு கொடுப்பது வேறு எதை நாம் தேவனுக்குத் திரும்பச் செலுத்த முடியும்? இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு கர்த்தருடைய நாமத்தை தொழுது கொள்ள வேண்டும். எது இரட்சிப்பின் பாத்திரம்? நாம் தான் சபையில் ஒவ்வொருவரும் இரட்சிப்பின் பாத்திரம். ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறைவேற்ற வேண்டும். என்று அப். பவுல் கலாத்திய கிறிஸ்தவர்களுக்கு வலியுறுத்துகிறார்.

அருமையான சகோதரிகளே! கிறிஸ்துவர்களாகிய நாம் பல வழிகளில் பிறர் பாரத்தைச் சுமக்க முடியும் நம்மிடத்தில் உள்ளதை தேவைகள் உள்ளவர்களுக்கு கொடுக்க வேண்டும். விசாரிக்க வேண்டும். தேவைகளை சந்திக்க வேண்டும். சுயநலம் நம்மிடத்தில் இருக்கக் கூடாது. தேவனும் இயேசுவும் இந்த தன்மைதான் கொண்டிருந்தார்கள். தேவ சாயலில் படைக்கப்பட்ட நாமும் அந்த குணதிசியங்களைக் கொண்டு செயல்படுத்தும் கிறிஸ்தவர்களாக இருக்க வேண்டும். பிறர் நலம் அவர்களுடைய ஆத்துமாவைப் பற்றிய அக்கறை நமக்கு வேண்டும் நாமுண்டு, நம்குடும்பமுண்டு என்றில்லாமல் தெய்வீக அன்பை நாம் பிரதிபலிக்க வேண்டும்.

எஸ்தர் ராணி, தமக்கு கிடைத்த ராஜமேன்மையை பெரிதாக எண்ணியிருந்தால் என்ன நடந்திருக்கும். மொர்தெகாய் மூலம் யூதர்களைப் பற்றிய செய்தி கிடைத்த போது உடனே செயல் பட்டாள். செத்தாலும் சாகிறேன் என்று தீர்மானித்தாள். யாருக்குத் தெரியும்? யூதருக்கு இரட்சிப்பு உண்டு. இதற்காக உனக்கு ராஜ மேன்மை கிடைத்திருக்கலாமே, யாருக்கு தெரியும்? என்ற வார்த்தை எஸ்தரை சும்மாவிடவில்லை. எப்படியாவது தம் மக்களை காப்பாற்ற வேண்டும் என்று துடித்தாள். துணிந்தாள், செயல்பட்டாள், காப்பாற்றினாள், நாமும் அழிந்து போகிற ஆத்துமாக்கள் மேல் பாரப்பட்டு சுவிசேஷத்தை அவர்களுக்கு சொல்லுவோம். அதற்காகத் தான் தேவன் நம் அனைவரையும் உயிரோடு வைத்திருக்கிறார். தேவன் தம் குமாரனை அனுப்பாமல் இருந்திருந்தால் இரட்சிப்பு

இல்லை. கிறிஸ்து பிதாவுக்குக் கீழ்ப்படிந்தார். அவருடைய கீழ்ப்படிதல் மூலமாக அநேகர் இரட்சிக்கப்படுகிறோம், அவர் தியாகத்தின் மூலமாக நாம் பிழைத்துக் கொண்டுள்ளோம். நாம் பிறருக்கு என்ன செய்கிறோம்? நம் முலமாக அநேகர் இந்த அன்பிற்கு முன் அதாவது தெய்வீக அன்பின் ஈவாக கிடைத்த சபைக்குள் கொண்டு வர நாம் காரணமாக ஏன் இருக்கக் கூடாது?

அருமையான சகோதரிகளே! சிந்திப்போம்! கிறிஸ்துவுக்காக அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து வாழ்கிறோம். அதில் எந்த சந்தேகமும் இல்லை. அதோடு நின்றுவிடாமல் அநேகரை சபைக்குள் கொண்டு வர நாம் காரணமாய் இருப்போம். யாருக்கு தெரியும்? இரட்சிப்பின் திட்டத்தை நிறைவேற்ற நாமும் நம் பங்கை செலுத்துவோம்! அப்போது தான் பரலோகம் நம் சொந்தமாகும். பரலோகம் தான் நம் நோக்கம். பெண்களாகிய நாம் ஒவ்வொருவரும் தேவன் நமக்கு கொடுத்த எல்லைக்குள் நின்று செயல்படவோம்? பரலோகத்தின் தேவன் அதற்கு உதவி செய்வாராக ! ஆமென்!! ✝

---

## நாளும் நடப்பும்

1. நாட்டில் பணவீக்கம் கட்டுக்கடங்காத வகையில் உயர்ந்து வருகிறது.
2. உக்ரைன் எல்லைப்பகுதியில் ரஷ்யா தனது படைகளை பாதி விலக்கிக் கொண்டிருக்கிறது.
3. இந்தியாவின் அனைத்து கிராமங்களையும் ட்ரோன்கள் மூலமாக நில அளவீடு செய்ய மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.
4. நகர்புற உள்ளாட்சித் தேர்தல் தமிழ்நாட்டில் 19 ம் தேதி நடைபெறுகிறது.
5. மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் தொடரை இந்தியா கைப்பற்றியது.

# ஞானஸ்நானம் அவசியமானதா?

Dr. ஏபில் நாயகம்

பிரியமான வாலிபர்களே! உங்கள் யாவருக்கும் இயேசுவின் இன்ப நாமத்தில் வாழ்த்துக்கள். நம் பிதாவின் தயையும், இரக்கமும் நம்மை இதுகாறும் நடத்தி வந்திருக்கிறது. சர்வ வல்லவருக்கு நன்றியாக இருக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்த நம்மை, தேவன் தமது கிருபையினால் மீட்டுக் கொண்டதுமல்லாமல், நம்மை அவருக்குச் சொந்த ஜனமாகவும் மாற்றியிருக்கிறார். நம்முடைய பழைய மனிதனைக் களைந்து, புது சிருஷ்டியாக நாம் மாறும் பொழுது நாம் தேவனுடைய பிள்ளை என்ற அந்தஸ்தைப் பெறுகிறோம். ஆனால், எப்பொழுது நாம் புது சிருஷ்டியாக மாறுகிறோம் என்ற கேள்விக்கான பதில் ஞானஸ்நானத்தின் பொழுது என்பது ஆனால், இதை பல பிரிவினை சபைகள் ஏற்பதில்லை. ஞானஸ்நானம் என்பது, ஒரு அடையாளம் மட்டுமே என்றும். ஞானஸ்நானம் இல்லாமல் இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் நம்புகிறார்கள்.

எனவே, ஞானஸ்நானம் ஒவருக்கு என்ன செய்கிறது என்று சில காரியங்கள் இந்த மாதம் பார்ப்போம்.

## ஞானஸ்நானம், பாவங்களை கழுவுகிறது

நித்தியத்தை மனிதன் இழந்ததற்கான காரணம் பாவம். ரோமர் 3:23 ன் படி பாவத்தின் சம்பளம் மரணம் என்று அறிகிறோம். அப்படியானால் பாவத்தில் இருக்கும் ஒருவர், மீட்பை எப்படி பெற்றுக் கொள்வது ஆம், பாவங்கள் மன்னிக்கப்பட வேண்டும். பாவங்கள் மன்னிக்கப்பட வேதம் காட்டும் வழி எது?

1. அப் 2:38: பேதுரு அவர்களை நோக்கி நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள் என்று வாசிக்கிறோம். இந்த வசனத்தில் ஞானஸ்நானம் பாவமன்னிப்புக்கென்று அறிந்து கொள்கிறோம்.

2. அப். 22:16; இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஞானஸ்நானம் பெற்று உன் பாவங்கள் போகக் கழுவப்படு என்றான். அனனியா என்ற தேவ மனிதன், பவுலிடம் இந்த வார்த்தைகளை கூறியிருக்கிறார். இந்த வசனத்தின் அடிப்படையில், தன் பாவங்கள் நீக்கப்படுவதற்க்கும், கழுவப்படுவதற்கும், பவுல் ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று நாம் புரிந்த கொள்ள முடியும்.

ஞானஸ்நானம், ஒருவரை கிறிஸ்துவுக்குள் கொண்டு வருகிறது I யோவான் 5:11 ல் தேவன் நமக்கு நித்திய ஜீவனை அவருடைய குமரானாகிய இயேசு கிறிஸ்துவில் வைத்திருக் கிறார் என்று பார்க்கிறோம்.

II தீமோ 2:10ல் இரட்சிப்பை இயேசு கிறிஸ்துவில் நாம் பெற்றுக் கொள்கிறோம் என்று வாசிக்கிறோம்.

ஆக இரட்சிப்பும் நித்திய ஜீவனும், இயேசு கிறிஸ்துவில் இருக்கிறது. அப்படியானால் அதை ஒருவர் எப்படிப்பெற்றுக் கொள்ள முடியும்? ஆம், இயேசு கிறிஸ்துவுக்குள் வரும் பொழுது பெற்றுக் கொள்ள முடியும்.

அப்போஸ்தலனாகிய பவுல் கலாத்தியர் 3:27 சொல்வதை கவனியுங்கள். ஏனெனில் உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைப் பேரோ அத்தனை பேரும் கிறிஸ்துவை தரித்துக் கொண்டீர்களே. பிரியமானவர்களே நாம் கிறிஸ்துவுக்குள் இருக்கும் இரட்சிப்பையும் நித்திய ஜீவனையும் பெற்றுக் கொள்ள நாம் அவரை தரித்துக் கொள்ள வேண்டும் என்று புரிந்து கொள்கிறோம். அந்தபடியாக, ஒருவர் கிறிஸ்துவை ஞானஸ்நானத்தின் மூலம் தரித்துக் கொள்ள முடியும்.

3. **ஞானஸ்நானம் ஒருவரை இரட்சிக்கிறது**.

I பேது. 3:21 ஞானஸ்நானமானது, நம்மை இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது என்று வாசிக்கிறோம்.

மாற் 16:16– விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நாம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் என்று நம் அருமை இரட்சகர் சொல்வதை வாசிக்க முடியும்.

பிரியமானவர்களே, ஒரு மனிதனை எது இரட்சிக்கிறது என்பதற்கு இதைவிட தெளிவான பதில் வேதத்தில் நமக்குத் தேவையில்லை. ஒருவர் இரட்சிக்கப்பட ஞானஸ்நானம் அவசியம் என்று நாம் புரிந்து கொள்கிறோம்.

**4. ஞானஸ்நானத்தில், பழைய மனிதன் மரித்து போகிறான்**

ரோமர் 6:4 ல், மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும் படிக்கு அவர்களுடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கபண்ணப்பட்டோம் என்று வாசிக்கிறோம்.

இந்த வசனத்தில் மூன்று வார்த்தைகளை நாம் கவனிக்க வேண்டும். ஞானஸ்நானம், அடக்கம், புதிதான ஜீவன். பிரியமானவர்களே! ஞானஸ்நானம் என்பது ஒருவருடைய பழைய மனிதன் மரித்துப் போகிற இடமாகவும், ஞானஸ் நானத்தின் தண்ணீர்களிலிருந்து வெளியே வரும் போது, புது ஜீவனைப் பெற்றுக் கொள்ளுகிற தருனமாகவும் இருக்கிறது. அப்படியென்றால், ஞானஸ்நானம் இல்லாமல் ஒருவர் எப்படி புதிய ஜீவனைப் பெற்றுக் கொள்ள முடியும்? எப்படி புது சிருஷ்டியாக மாற முடியும்?

எனவே, ஞானஸ்நானம் இல்லாமல் பாவமன்னிப்பு இல்லை, ஞானஸ்நானம் இல்லாமல் இரட்சிப்பு இல்லை, ஞானஸ்நானம் இல்லாமல் புது ஜீவன் இல்லை, ஞானஸ்நானம் இல்லாமல் கிறிஸ்துவை தரித்துக் கொள்ள முடியாது. அப்படியானால் ஞானஸ்நானம் தேவையில்லை என்ற போதனை வேதத்தின் அடிப்படையில் எப்படி சரியாக இருக்க முடியும்?

சிந்திப்போம்!! ✞

---

**மந்தையின் ஆடுகள்**

*மேய்ப்பனை விசுவாசிக்கிறது ( நம்பியிருக்கிறது)*

*மேய்ப்பனின் சத்தம் கேட்கிறது.*

*மேய்ப்பனுக்குப்பின் செல்லுகிறது*

– யோவான் 10:26,27

சிறுவர் பகுதி

# அன்பு

Dr. பிரெய்ஸி

ஹாய் குட்டீஸ்! நீங்கள் எல்லாரும் பள்ளிக்கூடத்திற்கு மகிழ்ச்சியாகச் செல்கிறீர்கள் என்றும், அவருடைய மகிமைக்காக நன்றாகப் படிக்கிறீர்களென்றும் நாங்கள் நம்புகிறோம். இந்த மாதம் நாம் தேவனிடத்திலும், மற்றவர்களிடத்திலும் அன்பு கூருவதைப் பற்றி பார்க்கப்போகிறோம். நாம் வெறுமனே வசனத்தினாலும், நாவினாலுமல்ல, கிரியையினாலும் உண்மையினாலும் அன்புகூரக்கடவோம் (1யோவான் 3:18).

வேதாகமத்தில் அன்பைப்பற்றி பல வசனங்களை நாம் காணமுடியும். நீங்களெல்லாரும் நல்ல பிள்ளைகளாக இருக்கிறீர்கள். எனவே, நிச்சயமாக தேவனிடத்தில் அன்பு கூருவீர்கள். ஆனால் உண்மையாகவே தேவனிடத்தில் அன்பு கூருவது என்பது தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள் வதாகும் (I யோவான் 5:3). நாம் நம்முடைய வாழ்க்கையில் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து அதைப் பின்பற்ற வேண்டும். எனவே தான் பிள்ளைகளே நீங்கள் தேவனிடத்தில் அன்புகூருவதாகச் சொன்னால் அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிய வேண்டும்.

இயேசு கிறிஸ்து எப்படி நம்மில் அன்பு கூர்ந்தாரோ அதேப்போல் நாமும் ஒவ்வொருவரிடத்திலும் அன்பு கூர வேண்டும். நம் நண்பர்கள் நமக்கு விரோதமாக தவறுகள் செய்யும் போது, நாம் அவர்களிடத்தில் அன்புகாட்டி அவர்களை மன்னிக்க வேண்டும். நம் நண்பர்கள் நமக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறோமோ, அவைகளை நாமும் அவர்களுக்குச் செய்ய வேண்டும் ( மத்தேயு 7:12). இது பொன்னான விதியாகும். மற்றவர்கள் தவறுகள் செய்யும் போது நாம் அவர்களிடத்தில் பொறுமையையும் அன்பையும் காட்டும் போது அவர்களை மீண்டும் சரியான பாதைக்குக் கொண்டு வர முடியும். நாம் அவர்களிடத்தில் மென்மையாக நடந்து கொண்டு, அவர்களை மன்னிக்கும் போது, அவர்கள் நாம் எவ்வளவு

நல்லவர்கள் என்பதைப் புரிந்து கொண்டு நம்மைப் போல் இருக்க விரும்புவார்கள். இது நாம் அவர்கள் மேல் ஒளிவீசி, நம் செயல்பாட்டினால் பரமப்பிதாவை மகிமைப்படுத்த நமக்கு வாய்ப்பைத் தருகிறது.

பிரியமான பிள்ளைகளே! நீங்கள் எதைச் செய்தாலும் அதை தேவன் மீதான அன்பின் நிமித்தமாகவும் மற்றவர்களின் மீதான அன்பின் நிமித்தமாகவும் செய்கிறீர்கள் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். எல்லோரிடத்திலும் அன்பாயிருந்து அன்பைப் பரப்பி, கிறிஸ்துவை மாதிரியாகக் கொண்டு அவரைப் பின்பற்றுங்கள். நாம் மற்றவர்களுக்கு மன்னிக்கும் போது தான் தேவன் நம்மை மன்னிப்பார் என்று எதிர்பார்க்க முடியும். தேவன் முந்தி நம்மிடத்தில் அன்பு கூர்ந்த படியால் நாமும் அவரிடத்தில் அன்பு கூருகிறோம் என்பதை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். [I யோவான் 4:19]. தேவன் நம்மிடத்தில் அன்பு கூர்ந்த படியால் தான் நமக்காக தம்மை தாமே பலியாக ஒப்புக்கொடுத்த ஒரே பேறான குமாரனை நமக்காகத் தந்தருளினார். மகிழ்ச்சியாயிருப் பதற்கும், அன்பைப் பரப்புவதற்கும் மற்றவர்களுக்காக தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த இயேசு கிறிஸ்துவைப் போல் அன்பு கூர வேண்டும்.

**அன்புடன்,**
**உங்கள் பிரெய்ஸி அக்கா.✝**

---

# வினாக்கள் :

1. நாம் எப்படி அன்பு செலுத்தக்கூடாது?
2. எது பொன்னான அல்லது தங்கவிதி?
3. தேவனிடத்தில் அன்பு கூருவது என்றால் என்ன?
4. நம் வாழ்க்கையில் யாரை மாதிரியாகப் பின்பற்ற வேண்டும்?
5. சமீபத்தில் யாரை நீங்கள் மன்னித்தீர்கள்?

# பிரிவினையில் தேவன் பிரியப்படுவதில்லை

Bro. பென்னி மார்ட்டின்

பிரியமான திருமறை ஆசான் வாசகர்கள் யாவருக்கும் வானவராம் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துதல்களை தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைய நாட்களில் கிறிஸ்தவ சமுதாயத்தை நாம் சற்று உற்றுப் பார்த்தால் ஒற்றுமை எனும் ஒற்றைச் சொல்லுக்கு மிகப் பெரிய பஞ்சம் ஏற்பட்டிருப்பதை கொஞ்சம் கூட மறுக்காமல் நாம் ஏகமனதாக ஏற்றுக் கொள்வோம். உலக முழுவதும் பெரும்பாலான மதங்கள் பிரிவினைகளால் பிளவு பட்டுக்கிடக்கின்றன. இதில் பாதிப்பிரிவினர் ஒரு துருவத்திலும் மீதிப்பிரிவினர் எதிர் துருவத்திலும், பிரிந்து கிடக்கின்றனர். ஒரு பக்கம் மித மிஞ்சிய அடிப்படை வாதத்திலும், மற்றொருபுறம் தாராள மயக்கொள்கையிலும், மூழ்கிக்கிடக்கிறது. இந்த ஆவிக்குரிய உலகம் தங்களைத்தாமே வானுலகின் வாரிசுகள் என்று வாயார வாழ்த்திக் கொள்ளும் கிறிஸ்தவர்கள் மத்தியில் கூட இப்பிரிவினை மனப்பான்மை ஒரு சவாலாகவே இருந்து வருகிறது. ஒரு முனையில் ஒரு சாரர் கிறிஸ்துவின் ஆவியை ஒட்டுமொத்தமாக இழந்து, தாங்கள் தனிப்பட்ட ரீதியில் ஏற்றுகொள்ள முடியாதவர்களுக்காக ஒவ்வொருவரையும், ஒவ்வொன்றையும் கண்டிக்கத் தயாராயிருக்கிறார்கள். மறு முனையில், மற்றொரு சாரர் வேதவாக்கியங்களின் உபதேசத்தை ஒரு ஓரமாக வைத்துவிட்டு, கிறிஸ்துவை விசுவாசிப்பதாக சொல்லிக் கொள்ளுகிற எல்லோருக்கும் தங்கள் ஐக்கிய கதவுகளைத் திறந்து வைப்பதை பார்க்கிறோம்.

ஒற்றுமை என்பதற்கு ஒருமைப்பாடு, ஒருங்கமைவு ஒன்றா யிருத்தல் போன்ற பொருள்கள் உள்ளன. ஆவிக்குரிய வாழ்வில் ஒற்றுமையின் பங்களிப்பு அளப்பரியது என்பதை அறிந்து கொண்ட சங்கீதக்காரன் அதன் அழகையும், அருமையையும் தன் இருதயத்தின் வார்த்தைகளால் வர்ணிக்கிறார். இதோ சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது ( சங்கீதம் 133:1) இவ்வசனத்தில் ஒற்றுமை எனும் நற்கீற்றை சங்கீதக்காரன் இரண்டு உதாரணங்களைக் கொண்டு விரிவாக விளக்குகிறார். இந்த ஒற்றுமை இஸ்ரவேலில் பிரதான ஆசாரியானாகிய ஆரோனை அபிஷேகம் பண்ண பயன்படுத்தப் பட்ட நறுமணத்தைப் போன்றது என்கிறார். எப்படி இந்த நறுமண தைலம் ஆரோனுடைய சிரசின் மேல் ஊற்றப்பட்டு,

அவனுடைய அங்கிகளின் மேல் இறங்குகிறதோ அப்படியே சகோதரர் மத்தியில் காணப்படும் ஒற்றுமையும் ஓர் இனிமையான தாக்கத்தை ஏற்படுத்தி தனிமையை தவிர்த்து நறுமணம் கமழச் செய்கிறது. இரண்டவதாக, இந்த விலையேறப் பெற்ற ஒற்றுமை எர்மோன் பர்வதத்தின் பனி போன்றது என்கிறார். வடக்கு பாலஸ்தீனத்தில் பார்வைக்கு பளிச்சென காட்சியளிக்கும் எர்மோன் பர்வதத்தி லிருந்து இறங்கி வரும் பனி சற்று கனமனதாக இருக்கும். அப்பனி தாவரங்களின் மீது படரும் போது இரவில் மழை பொழிந்தது போல் காட்சியளிக்கும். எப்படி அப்பனி வறண்ட பாலைவனத்தின் தாவரங்களுக்கு ஊட்டசத்து அளிக்கிறதோ அப்படியே ஒற்றுமையும் வீட்டிற்கும், நாட்டிற்கும் ஊக்கத்தை அளிக்கிறது. இது ஆரோக்கியமான ஆவிக்குரிய வளர்ச்சிக்கு ஆதாரமாக இருக்கிறது.

## I ஒற்றுமை ஏன் வேண்டும்?

பொதுவாக உலகத்தின் மக்கள் மனசாட்சியின்றி கிறிஸ்தவர்கள் மீது வைக்கும் குற்றச்சாட்டு கிறிஸ்தவர்கள் ஒற்றுமை யில்லாதவர்கள்! மார்க்கதின் மீது பற்றில்லாதவர்கள், கிறிஸ்தவத்தில் பல பிரிவுகள் உண்டு என்பவைகளாயிருக்கின்றன. நம்முடைய இசைவின்மை காரணமாக அவர்கள் நமக்கெதிராக பயன்படுத்தும் வசைமொழிகள் தசை அடிகளாகவே அமைகின்றன. நம் சமாதானப்பிரபுவாகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்படுவதற்கு சில மணி நேரங்களுக்கு முன்பாக கூட இந்த ஒற்றுமைக்காக ஜெபித்திருக்கிறார் என்றால் அது எந்த அளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை நினைத்துப்பாருங்கள். நான் இவர்களுக்காக வேண்டிக் கொள்ளுகிறதுமல்லாமவ், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர் களுக்காகவும் வேண்டிக் கொள்ளுகிறேன். அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும்பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறது போல அவர்களெல்லாரும் நம்மில் ஒனறாயிருக்கவும் வேண்டிக் கொள்ளுகிறேன் [ யோவான் 17, 20,21]. இவ்வசனப் பகுதியில் இந்த கடைசிப்பகுதி மிக முக்கியமானது. அதாவது, நாங்களும் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறோம் என்று சொல்லிக் கொள்ளும் கிறிஸ்தவர்களிடையே காணப்படும் ஒற்றுமையின்மை உலகத்தின் மக்கள் கிறிஸ்துவை விசுவாசியாமல் இருப்பதற்கு காரணமாக அமைவது நம் இதயத்துடிப்பை சில நொடிகள் நிறுத்திவிடுகிறது.

இன்றைய நாட்களில் முன்பெப்போதுமில்லாத அளவுக்கு இளைய தலைமுறையினரிடம் பிரிவினை தலைவிரித்தாடுவதால் அவர்களிடையே ஒற்றுமைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. கர்த்தருடைய சபையானது கர்த்தருடைய மரணத்திற்கு பிறகு ஏறக்குறைய ஐம்பதாவது நாளில் எருசலேமில் ஸ்தாபிக்கப்பட்டது. சில காலத்திற்கு இந்த ஒற்றுமைத்தான் கர்த்தருடைய சபையை மறறவர்களுக்கு அடையாளப்படுத்தியது. ஆதிக்கிறிஸ்தவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும் அந்நியோந்நியத்திலும் அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும், உறுதியாயத் தரிந்திருந்தார்கள் (அப்போஸ்தலர் 2:42). இதன் விளைவாக இரண்டு அதிகாரங்களுக்குப்பிறகு விசுவாசிகளாகிய திரளான கூட்டத்தார் ஒரே இருதயமும் ஒரே மனமுள்ளவர்களாயிருந்தார்கள் என்று நாம் வாசிப்பதில் எந்த ஆச்சரியமும் இல்லை. இங்கே நாம் கவனிக்க வேண்டிய காரியம் என்னவென்றல், இந்நாட்களில் சொற்ப எண்ணிக்கையில் அந்நாட்களில் அத்தனை திரளான விசுவாசிகளிடையே பிரிவினை இல்லாமல் ஒற்றுமை உணர்வு இருந்ததென்றால் இந்நாட்களிலில் சொற்ப எண்ணிக்கையில் இருக்கும் நாம் எந்த அளவு ஒற்றுமையை வெளிப் படுத்தவேண்டும்? சண்டைகளும், சச்சரவுகளும் நிறைந்த இவ்வுலகில் கிறிஸ்தவம் ஒற்றுமையின் மார்க்கம் என்று ஓங்கி ஒலிக்கச் செய்யும் பொறுப்பு நமக்கு தரப்பட்டிருக்கிறது. அதைத் துறக்கவோ, மறுக்கவோ நமக்கு எந்த உரிமையும் இல்லை. எபேசியர் 4:4–6 வசனங்களில் அப்போஸ்தலனாகிய பவுல் ஒற்றுமைக்கான அடித்தளத்தை அமைக்கிறார். உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டது போல, ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு, ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும், எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு. இங்கே ஒரே சரீரம் அல்லது ஒரே சபை ஒரே நம்பிக்கை போன்றவற்றை அடிப்படையாக வைத்து பவுல் ஒற்றுமைக்காக வேண்டுகோள் விடுப்பதை கவனியுங்கள். அருமையானவர்களே, நாமெல்லாரும் ஒரே கர்த்தரை விசுவாசித்து, ஒரே உபதேசத்தை விசுவாசித்து அவருக்கு கீழ்ப்படிந்தால் நாம் எப்படி பிரிந்திருக்க முடியும்?

எனவே, கிறிஸ்தவ வாழ்க்கையில் ஒற்றுமையை ஒற்றை இலக்காக கொள்வோம். அநேகரை கிறிஸ்துவுக்குள் கொண்டு வருவோம்.

**I பிரிவினை ஏன் கூடாது?**

நம் பரிசுத்த தேவனுக்கு பிரிவினை என்பது பிரியமில்லாத ஒன்றாயிருக்கிற படியால் அதை நாம் எவ்வித பரிவுமின்றி

எதிர்க்க வேண்டும். பிரிவினை என்பது பிசாசின் தந்திரமா யிருக்கிறது. முதல் நூற்றாண்டு சபை பிரிவினையின்றி ஒற்றுமை யாக இருந்தபடியால் தான் அபார வளர்ச்சியடைந்து, அன்றைய உலகில் அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது. பிரிவினையைக் குறித்து பிதாக்களின் காலம் தொடங்கியே பரிசுத்த வேதாகமத்தில் பல எச்சரிப்புகள் விடுக்கப்பட்டுள்ளன. உதாரணமாக பிரிவினையையும் வாக்குவாதத்தையும் விரும்பாத ஆபிரகாம் லோத்தை நோக்கி: எனக்கும் உனக்கும் என் மேய்பருக்கும், உன் மேய்ப்பருக்கும், வாக்குவாதம் வேண்டாம் நாம் சகோதரர் என்றான் [ ஆதியாகமம் 13:8]. ஆபிரகாம் ஒற்றுமைக்கு உலை வைக்கும் ஒரு நிலை ஏற்பட்ட போது தன் ஆஸ்திகளோ, உடைமைளோ பறிபோனாலும் பரவாயில்லை என்று இங்கே ஆபிரகாம் ஒற்றுமைக்கு பிரிவினை கூடாது என்று சமாதான த்தை விரும்பி விட்டுக் கொடுத்தி ருக்கிறார். பிரிய மானவர்களே, நம் வாழ்க்கையின் பல கட்டங்களில் விட்டுக் கொடுக்காமல் இருப்பதால் தான் ஒற்றுமை சீர்குலைகிறது என்பதை நாம் சீர்தூக்கிப்பார்க்க வேண்டும். சிலர் ஒற்றமையைப் பற்றி சற்றும் கவலையேபடாமல் வெற்றி பெறுவதிலேயே குறியா யிருந்து பிரிவினைக்கு வழி வகுத்து விடுகிறார்கள். ஒருவர் எப்போதும் தன் வாழ்க்கையிலும் வார்த்தையிலும் வெற்றி பெற்றுக் கொண்டே இருக்க வேண்டும் என்று அவசியமில்லை, சில காரியங்களை நாம் விட்டு கொடுக்கும் போது பிரிவினையைத் தவிர்க்க முடியும்.

பிரிவினை என்பது தேவன் அருவருக்கும் ஏழு காரியங்களில் ஒன்றாயிருக்கிற படியால், அதை நம்மை விட்டு அறவே ஒழித்து விட வேண்டும்.[ நீதிமொழிகள் 6:19]. பவுல் ரோமபுரியிலிருந்த கிறிஸ்தவர்களுக்கு எழுதும்போது நீங்கள் கற்றுக் கொண்ட உபதேசத்திற்கு விரோதமாக பிரிவினைகளையும், இடறல்களை யும் உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருந்து, அவர்களைவிட்டு விலக வேண்டும் என்று புத்தி சொல்லுகிறார் [ரோமர் 16:17]. அதேபோல் கொரிந்து சபையில் பிரிவினை சம்மந்தமாக நடந்தேறிய கொடுமைகளைக் கண்டு கொதித் தெழுந்த பவுல் நீங்கள் எல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகள் இல்லாமல் ஏக மனதும், ஏக யோசனையும் உள்ள வர்களாய் சீர் பொருந்துங்கள் என்று மன்றாடுகிறார். [I கொரி ந்தியர்1:10]. பிரியமானவர்களே, கிறிஸ்தவத்தின் வளர்ச்சிக்கு பெரும் தடையாக இருக்கும் பிரிவினைகளை களைந்தெறிந்து, இருள் சூழ்ந்த இவ்வுலகில் ஒற்றுமை என்னும் ஒளியை வீசச் செய்து ஒரு கூட்டத்தாரை ஒன்றான மெய் தேவனிடத்திற்கு கொண்டு வருவோம், அதற்கு தேவன் தாமே உதவிசெய்வாராக! ஆமென்!! ✝

# யார் இந்த பேலியாளின் மக்கள்?

**சகோ. பாண்டியன்**

**தே**வனுக்கே மகிமை உண்டாவதாக கிறிஸ்தவர்களாகிய நாம் தேவனுக்கே பிரியமாக நடக்கக் கடமைப்பட்டவர்கள். நான் உலகத்தானல்லாதது போல அவர்களும் உலகத்தார் அல்ல என்று நமதாண்டவர் ஜெபித்தார். தேவனுடைய ஜனங்கள் பிரித்தெடுக்கப்பட்டவர்கள், இவ்வுலகத்தினின்று தெரிந்து கொள்ளப்பட்டவர்கள். பழைய ஏற்பாட்டில் தேவனுடைய ஜனங்களுக்கு பிரச்சனைகளையும், இடறல்களையும் உண்டாக்கும் மனுஷர்களாக இந்த பேலியாளின் மக்கள் இருந்தார்கள். இதன் உச்சரிப்பு பஸ், பர்னபா போன்ற வார்த்தைகளில் வரும் "ப" (B) சத்தம் வரும்படி பேலியால் என்ற பதம் வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

பேலியாளின் மக்கள் என்பதற்கு துஷ்ட மனிதர் என்று அர்த்தமாகும் ( உபா 13:12), இதன் விளக்கமாக தீவினைச் செய்ய உபாயஞ் செய்கிறவன் துஷ்டன் என்று நீதி 24:8ல் பார்க்கிறோம். அவர்கள் அக்கிரம உதடுகள் சொல்வதை உற்றுக் கேட்பவர்கள் என்றும், எப்போதும் கலகத்தையே தேடுகிறவர்கள் எனவும் நீதி 17:4,11 ல் காண்கிறோம். நாம் தேவனால் உண்டாயிருக்கிறோம் என்று உலகமுழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது என்றும் அறிந்திருக்கிறோம். எனவே, இப்படிப்பட்டவர்களிடமிருந்து விலகியிருக்க வேண்டுமென்பதே இக்கட்டுரையின் சாராம்சம் ஆகும்.

பேலியாள் மக்களின் குணாதிசயம் **முதலாவது, இவர்கள் உண்மையான தெய்வத்தை விட்டு வேறே தேவர்களை சேவிக்க தூண்டுபவர்கள்** என்று உபா. 13:13ல் காண்கிறோம். இவ்வுலகில் பெரும்பாலும் பொருளாசையை பயன்படுத்தி வேறே தெய்வங்களை வணங்க தூண்டுகிறார்கள். **இரண்டாவது பிறருடைய குடும்ப மகிழ்ச்சியை கெடுப்பவர்கள்** பேலியாளின் மக்களாகும் (நியாயா 19:13) இங்கு தவறு செய்த தன் மனைவியை பிரிந்திருந்த ஒரு லேவியன் மனம்மாறி சேர்ந்து வாழும்படி தன் மனைவியை அழைத்து கொண்டு தன் இருப்பிடத்திற்கு திரும்பிக் கொண்டிருந்தான். வழிப் பிரயாணத்தில் இரவு வந்த போது பென்யமீன் கோத்திரத்தார் மத்தியில் தங்க நேரிட்டது. அந்த இடத்தில் பேலியாளின் மக்கள் அந்த லேவியனின் குடும்பத்தைச் சீரழித்து அவன் மனைவி கொலை செய்யப்பட்ட காரணமானார்கள் (நியா. 19:22). எனவே சமாதானம் பண்ணுவற்கு மாறாக நடப்பவர்கள் பேலியாளின மக்களால் இருக்கிறார்கள்.

**மூன்றாவதாக, தேவ சமூகத்தில் துணிகரமாய் நடப்பவர்கள்** பேலியானின் மக்களாவார்கள். அன்னாள் தேவ சமூகத்தில் தன் பிள்ளையில்லாக்குறையை சஞ்சலத்தோடு ஜெபித்துக் கொண்டிருந்தாள். அப்போது ஏலி அவள் மதுபானம் பண்ணி வெறித்திருப்பதாக கடிந்து கொண்டார். அதற்கு அன்னாள் உம்முடைய அடியாளை பேலியாளின் மகளாத எண்ணாதேயும் என்றுக் கேட்டுக் கொண்டாள் [I சாமு 1:15,16] அடுத்து வரும் அதிகாரத்தில் ஏலியின் பிள்ளைகள் கர்த்தரை அறியாமல் பேலியாளின் மக்களாய் இருந்தார்கள் என பார்க்கிறோம். அவர்கள் ஜனங்கள் தேவனுக்கென்று செலுத்தும் பலி மாம்சத்தில் தங்களுக்கென்று துணிகரமாய் எடுத்துக் கொண்டனர். இந்த பாவம் தேவ சந்நிதியில் மிகவும் பெரியதாய் இருந்தது என்று வேதம் குறிப்பிடுகிறது [I சாமு 2:17]. நாமும் சபைக் கூடுதலில் நிதானமாக எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் [பிர.5:2].

**நான்காவது வழிநடத்தும், தேவனால் தெரிந்துகொள்ளப் பட்டவர்களை அசட்டை செய்வது** பேலியாள் மக்களின் இயல்பாக இருக்கிறது. முதல் ராஜாவாக தெரிந்த கொள்ளப்பட்ட சவுல் தேவ ஆலோசனையின் படி நியமிக்கப்பட்டும் சில பேலியாளின் மக்கள் அதை ஏற்க மறுத்தார்கள் I சாமு. 10:27 சவுலோ காது கேளாதவன் போலிருந்தான். நாமும் மற்றவரின் தவறான விமர்சனத்திற்கு சில நேரங்களில் மவுனமாயிருக்க வேண்டும் [ பிர. 7:21]. தாவீது மோசே ஏன் நமது ஆண்டவர் இயேசுவும் அசட்டை பண்ணப்பட்டவர்களே! ஆனால், வழி நடத்துபவர்களை நாம் கனம் பண்ண வேண்டும் என்பதே உண்மை [I தீமோ. 5:17].

**ஐந்தாவது, பிறர் நல்லதைச் சொல்லும் போது கேட்க மறுப்பது;** தன் மந்தைக்கு உதவி செய்த தாவிதின் ஆட்களை **நாபால்** அவமதித்த போது அவனுடைய வேலைக்காரர் நன்மையானதை எடுத்துச் சொன்னார்கள். ஆனால், அவனோ ஒருவரும் தம்மோடே பேசக் கூடாதபடிக்கு பேலியாளின் மகனாயிருந்தான் நாபான் [I சாமு. 25:17] நல்லதைக் கேட்க மறுத்த அவனைப் பற்றி அவன் மனைவி அபிகாயிலும் கூட தாவிதினிடம் குறிப்பிடும் போது இந்த பேலி யாளின் மனஷனை ஒரு பொருட்டாக எண்ண வேண்டாம் என்றாள். நாமும் மற்றவர் பேசும் போது கவனிக்க வேண்டும். [யாக். 1:19]

**ஆறாவது, பிறருக்குக் கிடைக்க வேண்டிய நன்மையை தடைசெய்யும் நபர்கள்** பேலியாளின் மக்களாய் இருக்கிறார்கள்.

தாவீதினுடைய குடும்பத்தாரும், ஜனங்களும் அமலேக்கியரால் சிறை பிடிக்கப்பட்ட போது, தாவீது தம்மோடு சிலரை அழைத்துச் சென்று போரிட்டு எல்லோரையும் மீட்டுக் கொண்டு வந்தான். அப்போது கிடைத்த கொள்ளைப் பொருளில் போருக்கு வராதவர்களுக்கு பங்கு கொடுக்கக்கூடாது என்று சில பேலியாளின் மக்கள் தடை செய்தார்கள். ஆனால், தாவீது அனைவருக்கும் சமமாக பங்கிட்டார். [I சாமு. 30:22]. நாமும் தாவீதைப் போல நமது வெற்றிகள் தேவனால் கிடைத்தது என்று அறிக்கையிடக் கற்றுக் கொள்வோம் [சங். 20:7].

**ஏழாவதாக, காரணமில்லாமல் நல்லவர்களை பகைப்பது அல்லது தூஷிப்பது** தாவீதின் நிலைமைக் கொஞ்சம் தாழ்ந்த போது சாதாரண மனுஷனாகிய சீமேயி தாவீதை அவமதித்து தூஷிக்கிறான் அப்போது தாவீது சினம் கொள்ளாமல் அவனுடைய தூஷணத்திற்கு பதிலாக தேவன் எனக்கு நன்மையை சரிக்கட்டுவார் என்று பெருந்தன்மை யோடும் தேவன் மீது நம்பிக்கையோடும் இருந்தான். [2 சாமு 16:7–12] அப்படிப்போல நாபோத் திராட்சை தோட்டத்தை பறிக்க யசபேல் பொய்சாட்சிகளை ஏற்படுத்தி அவனைக் கொலை செய்தார். அப்படி பொய்சாட்சி சொன்னவர்கள் பேலியாளின் மக்கள் என்கிறது. வேதம் [I இராஜா 21:10].

இப்படிப்பட்ட குணாதிசயங்கள் உள்ள மக்கள் நிறைந்த உலகத்திலிருந்து தான் தேவன் நம்மை கிறிஸ்துவுக்குள் தெரிந்து கொண்டு சபையில் சேர்ந்துள்ளார். அப். பவுல் இதைக் குறித்துப் பேசும் போது கிறிஸ்துவுக்கும் பேலியாருக்கும் இசைமேது? விசவாசிக்கும் அவிசுவாசிக்கும் பங்கேது? அப்படி பிரிந்து இருக்கும் போது தான் நான் உங்களுக்கு பிதா நீங்கள் எனக்குக் குமாரரும் குமாரத்திகளாயும் இருப்பீர்கள் [2கொரி6:14–18] என்கிறார். பேதுருவும், புறஜாதிகள் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு தேவன் மகிமைப்படுத்தும் படி நடந்துக் கொள்ளுங்கள் என்கிறார் [I பேதுரு 2:10–12]. தேவக் கிருபை நம்மனைவரோடுங்கூட இருப்பதாக ஆமென்! ✝

---

## சிறியவைகளின் மகத்துவம்

ஒரு வீட்டோடு ஒப்பிடும்போது கதவு சிறியதாயிருக்கிறது

ஒரு கதவோடு ஒப்பிடும்போது பூட்டு சிறியதாயிருக்கிறது

மேற்சொல்லப்பட்டவைகளோடு ஒப்பிடும் போது சாவி சிறியதாயிருக்கிறது

ஆனால் ஒரு சாவி ஒட்டுமொத்த வீட்டையும் திறந்துவிடும்

எனவே சிறியவைகள் என்று எதையும் அற்பமாக எண்ண வேண்டாம்.

# இடறல்கள்

**சகோ. K.M. பிலிப் – பவானி**

**அ**ன்பின் ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். தேவனுடைய பிள்ளைகளின் வாழ்க்கையில் இடறல் என்ற இடையூறு வரத்தான் செய்யும். அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள் என்பதிலிருந்து அறிகிறோம் (II தீமோத்தேயு 3:12). இடறல் நம் தேவ பக்தியை சோதிக்கும்; வளர்ச்சியை தடை செய்யும்; இடறி விழச் செய்யும். இடறல் உண்டு என்று சொன்ன அதே வேதம், நீதிமான் ஏழுதரம் விழுந்தாலும் திரும்பவும் எழுந்திருப்பான் (நீதி : 24:16) என்று நம்மை தைரியப்படுத்துகிறது. ஆகவே நாம் வேதம் கூறும் ஆலோசனையைக் கவனித்து அவைகளின்படி நடந்து நம்மை காத்துக் கொள்வோம். அவர் நீதி மான்களுக்கென்று மெய் ஞானத்தை வைத்து வைத்திருக்கிறார். உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு அவர் கேடகமாயிருக்கிறார். உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளை செவ்வைப்படுத்துகிறார் (நீதி 2:7;3:6). அன்பானவர்களே! இடறல் வராமல் இருக்காது. ஆனால், நாம் அதை தேடிப்போவதுதான் மதியீனம்.

தேவன், ஏவாளை ஆதாமுக்கு ஏற்ற துணையாயிருக்கவே படைத்தார். ஆனால் அவளோ ஆதாமைவிட்டு தனிமையாய் தோட்டத்தில் சுற்றிக்கொண்டிருந்தாள். இச்சந்தர்பத்திற்காகவே காத்திருந்த சாத்தானாகிய சர்ப்பம் ஏவாளை எளிதில் இடறச்செய்து பாவத்தில் தேவ கட்டளையை மீறி பாவத்தில் விழச்செய்தான். அது ஆதாமையும் பாதித்தது. ஆம் தனிமை நம்மை எளிதில் இடறிவீழ்த்தி விடும். இது ஆவிக்குரியவர்களாகிய நமக்கு மிக அவசியமான பாடமாகும். தேவ பக்திக்குரிய காரியத்தை விட்டு நம்மை ஒருபோதும் தனிமைப் படுத்தவே கூடாது. தேவனோடும் தேவ பிள்ளைகளோடும் (சபை) கணவன், மனைவி பெற்றோர் பிள்ளைகள்,இப்படி ஆவிக்குரிய தொடர்பு இருந்து கொண்டே இருக்க வேண்டும். வேதவாசிப்பு, ஜெபம், தியானம் என்று எந்நிலையிலும் தேவனுடைய உறவில் நிலைத்து நிற்க வேண்டும். தனிமையில் சாத்தானின் கூட்டம் நம்மை சூழ்ந்து விடாதபடி மிக கவனமாய் எச்சரிக்கையாயிருக்க வேண்டும். தகப்பனை விட்டுப் பிரிந்து தனியாய்போன இளையகுமாரனை கெட்ட நண்பர்கள் சூழ்ந்து கொண்டதால், தனக்குண்டான எல்லாவற்றையும், இழந்ததோடு, பாவத்தின் கோரப்பிடியில் சிக்கித் தவித்து தன்னையும் இழந்து நின்றான். அப்படியே

இயேசுவோடும், சீஷர்களோடும் இணைந்து இருந்தவரை யூதாஸின் சிந்தனை சரியாயிருந்தது. எப்பொழுது யூதாஸ் சிந்தனையில் தன்னை தனிமைப்படுத்தினானோ அப்பொழுது யூதாஸ்க்குள் சாத்தான் புகுந்தான் (மத்.26:14). சாத்தானின் கூட்டம் (ஆசாரியர்கள், வேதபாரகர்கள், பரிசேயர்கள் ) அவனை சூழ்ந்து கொண்டார்கள். அற்பகாசுக்கு அடிமை ஆனான். தொடர்ந்து தவறுகள் செய்ய அவன் இருதயம் துணிகரம் கொண்டது. ஆம் இன்று நம்மில் சிலருடைய நிலையும் இப்படியே இருக்கிறது. தனிமை அவர்களை தள்ளிக் கொண்டேபோய் விடுகிறது. மனம் நிலையாயிருக்க சாதனை என்ற வேலை கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும். அதற்காகவே தேவன் வேதத்தை கையில் கொடுத்திருக்கிறார். சபை, சுவிசேஷ ஊழியம், சபைவளர்ச்சியில் ஈடுபாடு, சொந்த குடும்பத்தின் ஆன்மீக வளர்ச்சி இப்படி அநேக நடைமுறைகளை நமக்கு முன் வைத்திருக்கிறார். இவைகளில் நம்மை இணைத்துக் கொள்ளாமல் நம்மை தனிமைப்படுத்தினால் யூதர்களைப்போல எளிதில் இடறிவிழுந்து விடுவோம். நாம் நீதிமான்களாய் இருந்து, நீதிமான்களோடு உறவு வைத்துக் கொண்டால் நாம் விழுந்தாலும் எழுந்திருக்க முடியும். துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவி களுடைய வழியில் நில்லாமலும் பரியாசக்காரர் உட்காருமிடத்தில் உட்காராமலும் இருப்போம் (சங். 1:1). இடறல் நம்மைத் தேடி வந்தால் வேத வசனத்தின் துணைகொண்டு எதிர்த்து நிற்போம். விலகி ஓடுவோம். என் மகனே, என் போதகத்தை மறவாதே உன் இருதயம் என் கட்டளைகளைக் காக்கக் கடவது. அப்பொழுது நீ பயமின்றி உன் வழியில் நடப்பாய்; உன் கால் இடறாது. கர்த்தர் உன் நம்பிக்கையாயிருந்து உன் கால் சிக்கிக் கொள்ளாதபடி காப்பார், (நீதி. 3:1,23,26).

இதைத்தான் யோசேப்பின் வாழ்க்கையில் பார்க்கிறோம். எல்லோரையும் விட்டு எகிப்தில் தனிமைப்படுத்தப்பட்டான். ஆனால் அவன் நீதிமானாயிருந்ததால் கர்த்தர் யோசேப்போடே இருந்தார் என்று பார்க்கிறோம் (ஆதி 39:2). இந்த உறவே யோசேப்பை எல்லாவிதத்திலும் பரிசுத்தமாய் காத்துக் கொண்டது. போத்திபரின் மனைவியால் ஏற்பட்ட சோதனையில் அவன் கால் சிக்கிக் கொள்ளாதபடி தேவன் காத்துக் கொண்டார். நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன். திகையாதே நான் உன் தேவன் .... என் நீதியின் வலது கரத்தினால் உன்னைத் தாங்குவேன். என்பதே (ஏசா. 41:10). தேவன் கொடுக்கும் தைரியம்

இது தேவனுக்கு விரோதமான பாவம் என்று அடையாளம் கண்டு விலகி ஓடினான். ஆம் பாவத்தோடு சமரசம் கூடாது; சாக்குப்போக்கு சொல்லக்கூடாது. விலகி ஓடு.

இடறலை நாம் தேடிப்போனால், அது தொடர் கதையாகிவிடும். முடிவில் மிக மோசமான நிலையில் நம்மை அமிழ்த்திவிடும். நசரேயனாகத் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவன்தான் சிம்சோன். பெற்றோரால் நன்கு வளர்க்கப்பட்டவன்தான். ஆனாலும் அவன் தான் யார் என்பதை மறந்து, போகக் கூடாதே புற சாதிகளிடத்தில் சென்று பார்க்கக் கூடாத பெண்ணை பார்த்து விருப்பங் கொண்டான். இக்காரியத்தில் அவன் தன்னை இழந்தான். தேவன் பெற்றோரைக் கொண்டும், வழியில் சிங்கத்தைக் கொண்டும் எச்சரித்தார். இறுதியில் அவன் விரும்பிய பெண் கிடைக்கவில்லை. இப்பொழுது அவன் திருந்தியிருக்கலாம்.

ஆனால், அவன் தொடர்ந்து ஒரு வேசியினிடத்தில் தொடர்பு வைத்துக் கொண்டான். வேசியின் மூலம் மூன்று முறை ஆபத்து வந்தது. தேவன் தப்புவித்தார். கட்டளையை காத்துக் கொள்ளுகிறவன் தன் ஆத்துமாவைக் காக்கிறான். தன் வழிகளை அவமதிக்கிறவன் சாவான் [நீதி. 19:16] என்பது சரியே என்பதற்கு சிம்சோன் சான்றாக நிற்கிறான். தேவ எச்சரிப்பை உணரவில்லை; நசரேயன் என்பதையும் மறந்து விட்டான். உணர்வற்ற இத்தன்மை அவன் உயிருக்கே உலை வைத்து. எதிரிகளின் கையில் சிக்கி தன் இன்னுயிரை இழந்து போனான். அடிக்கடி கடிந்து கொள்ளபபட்டும் தன் பிடரியைக் கடினப்படுத்துகிறவன் சகாயமின்றி சடிதியில் நாசமடைவான் என்பதும் கர்த்தருக்குப் பயப்படுதல் ஜீவ ஊற்று. அதினால் மரணக்கண்ணிகளுக்குத் தப்பலாம் [நீதி 29:1, 14:27] என்பதையும் நாம் தெளிவாய் புரிந்து கொள்வோம். இடறலை நோக்கி நாம் செல்லக்கூடாது. வரும் இடறலுக்கு இடம் கொடுத்து நம்மை தனிமைப்படுத்தாமல், விழிப்புள்ளவர்களாய் இடறலுக்கு விலகுவோம். மேலும் இடறலைத் தவிர்க்க இடறல் இல்லாத வாழ்க்கை வாழ 11 பேதுரு 5–7 வசனங்களில் உள்ளவற்றை நம் வாழ்க்கையில் கூட்டி வழங்குவோம். மேற்கண்ட வசனங்களில் கூட்டி வழங்க வேண்டிய 8– காரியங்களை கவனிப்போம்.

1. **விசுவாசம் :–** தாவீது 8–வது பிள்ளை ஆடு மேய்ப்பவன், சிறு வாலிபன், உலக அனுபவம் அதிகம் இல்லாதவன்; போர் பயிற்சி

சிறிதும் இல்லாதவன். ஆனாலும் அவனிடத்தில் விசுவாசம் இருந்தது. கர்த்தர் என் பெலனும் என் கேடகமுமாயிருக்கிறார். என் இருதயம் அவரை நம்பியிருந்தது. நான் சகாயம் பெற்றேன். (சங் 28:7). இதுவே தாவீதின் சகல இடையூறுகளுக்கும் அவனை விலக்கி, தூக்கி நிறுத்தியது. இதை தன் வாழ்நாள் முழுவதும் மற்றவர்களுக்கு முன் வழங்கினார். நாங்களோ எங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைக் குறித்தே மேன்மை பாராட்டுவோம்; கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப் பாருங்கள் என்று (சங் 34:8) தன் விசுவாசத்தை பகிரங்கப்படுத்தினார். நாமும் நம் விசுவாசத்தில் உறுதியாயிருந்து அதை மற்றவர்களுக்குமுன் வழங்கினால் இடையூறுகளின் மேல் வெற்றி பெறுவோம். நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கும் ஜெயம் ஆகும் (1யோவான் 5:4).

2. **விசுவாசத்தோடே தைரியத்தையும் :-** இங்கு தாவீதின் திட விசுவாசம்தான் தைரியத்தைக் கொடுத்தது. பயப்படுகிறவன் தேவனால் பிறந்தவன் அல்ல. பயம் விசுவாசத்தையும் குலைத்துப் போடும். ....உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள்; நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என் கர்த்தர் சொல்லியிருக்கிறார். அதினாலே நாம் தைரியங்கொண்டு ..... மனுஷன் எனக்கு என்ன செய்வான் என்று சொல்லுங்கள் (எபி.13:5,6). அதிலே இடறலுக்கு எதிர்த்து நில்லுங்கள் உங்கள் விசுவாசத் தோடே தைரியத்தை கூட்டி வழங்கி இடறலின் மேல் வெற்றி பெறுங்கள்.

3. **ஞானத்தையும் :-** ஞானம் கர்த்தருடையது (நீதி. 2:6) கர்த்தர் ஞானத்தை தருகிறார் என்பதை சரியாய் புரிந்து கொண்ட அனாதை எஸ்தர் அரசியானாள். ராணியாகத் தேர்ந்தெடுக்கும் குழுவுக்கு முன் தனக்கு நியமித்த காரியத்தில் போதுமென்ற மனதுடன் தேவனிடத்தில் ஒப்புக்கொடுத்து ஞானமாய் நடந்ததால் ராணியாக உயர்த்தப்பட்டாள். தன் ஜனமாகிய யூதர்களுக்கு அழிவு நிச்சயக்கப்பட்டிருந்தும் தன் ஞான செயல்களால் ராஜாவின் கண்களில் தயவு பெற்று தன் இனத்திற்கே இரட்சிப்பை, விடுதலையை பெற்றுத்தந்தாள். தனி ஒரு பெண், தன் விசுவாசத் தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும் கூட்டி வாங்கியதால் லட்சக் கணக்கான யூத குலமே சாவின் இடறிலிருந்து காப்பாற்றப்பட்டது. தாவீது தன் அனுபவமாக நீர் உம்முடைய கற்பனைகளைக் கொண்டு என்னை என் சத்துருக் களிலும் அதிக ஞானமுள்ளவனாக்குகிறீர்

(119:98) என்பதை கவனியுங்கள். ஞானமாய் நடந்து இடறலைத் தவிர்ப்போம்.

**4. இச்சையடக்கம் :-** இடறலில் பெரும்பங்கு வகிப்பது இச்சை கள்தான். கண்களின் இச்சை, மாமிசத்தின் இச்சை, ஜீவனத்தின் பெருமைகளாகும். ஆதி மனுஷி ஏவாளின் கண்களில் இச்சையும் ஜீவனத்தின் பெருமையுமே அவள் இடறி விழுந்து போகக்காரணமாயிருந்தது (ஆதி. 3:6). யோசேப்பு இச்சை யடக்கத்தோடு தன் சரீரத்தையும் இருதயத்தையும் காத்துக் கொண்டால்தான் நாட்டி ற்கே அதிபதியானான் (ஆதி.39:7-13). ஆம் தேவ பிள்ளைகளாகிய நாம் துர் இச்சைகளுக்கு இடமாக உடலை பேணாமலிருந்து, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டு இடறலில் வெற்றிபெருவோமாக. (ரோம. 13:13,14).

**5. பொறுமை:** விசுவாசிக்கிறவன் பதறான். ஆம் இயேசுவின் சிலுவைப் பயணத்தில் அவர் காட்டிய நீடிய பொறுமை உலகளாவிய இடறல்களை வென்று இன்றும் வெற்றி நடைபோடுகிறது. நம்முடைய விசுவாசப் பயணத்திலும் வெற்றிபெற பொறுமையை கூட்டி வழங்குவோம்.

**6. தேவ பக்தி:** யோபுவைக்குறித்து தேவனே தேவ பக்தியுள்ளவன் என்று பாராட்டுகிறார். ஆனாலும் அவன் வாழ்க்கையை இடறல்கள் சீர்குலைத்தது. ஆனால் யோபுவோ தன் தேவ பக்தி வாழ்க்கையில் நிமிர்ந்து நின்றார். கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார். கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம் என்றார். (யோபு 1:21). யோபுவின் தேவபக்தியை கனப்படுத்த இடறல்கள் எல்லாவற்றையும் நீக்கி இரட்டிப்பான ஆசீர்வாதத்தால் கனப்படுத்தினார்.

**7. சகோதர சிநேகம் :-** சபையில் உள்ள சகோதர சகோதரியிடம் சிநேகமாயிருக்க வேண்டும். கர்த்தருடைய பந்தி இதை வலியுறுத்துகிறது. அதே சமயம் நம்மைச் சுற்றியுள்ள இரட்சிக்கப்படாத சகோதர்களிடத்திலும் சிநேகங் கொண்டு நம் ஓட்டத்தில் அவர்களையும் இணைத்துக் கொள்ள வேண்டும். எல்லோருமே சகோதர சகோதரிகள் என்றால் இடறல்கள் வருமா?

**8. அன்பு :** மேற்கண்ட ஏழு பண்புகளும் அன்பில் அடங்கும் . இதைத் தான் இயேசு உன்னிடத்தில் நீ அன்பு கூருவது போல பிறரிடத்திலும் அன்பு கூருவாயாக என்றார். ( மத். 22:39) இந்த அன்பிலே பாவமில்லை: பயமில்லை: ஆனால் பக்தி உண்டு; பாசம் , நேசம் உண்டு. ஆகவே இடறல் ஒரு போதும் இல்லை. இடறல் இல்லையென்பதால் நம்முடைய விசுவாச ஓட்டத்திலும் வெற்றி நிச்சயமே . ஆமென். ✝

# *கிறிஸ்து என்னும் மார்க்கம்*
# *தேவத்துவம்*

Bro J. **ஆபகூக் ஜேம்ஸ் ராஜகுமார், சென்னை**

**பி**தா, குமாரன், பரிசுத்த ஆவியானவர், இந்த மூன்று பெயர்களையுடையவர்கள் வெவ்வேறு நபர்களா அல்லது ஒரே நபரா என்பதில் அநேகர் குழப்பமான போதனைகள் செய்கிறதைக் கேட்டிருக்கிறோம் அல்லது கேள்விப்பட்டிருக்கிறோம். இதைக்குறித்து சில கேள்விகள் கேட்டு அதற்கு பதில் காணலாம்.

A. இயேசு கிறிஸ்து பொய் சொல்வாரா?

தேவன் தம் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை இந்த உலகத்திற்கு அனுப்பினார் என்று இயேசுவானவர் கூறினார். அப்போஸ்தலர்களும் கூறினார்கள். லூக்.4:19; யோவா. 3:17; 5:36; 8:42; 16:5; அப்.3:26; கலா.4:5; 1 யோவா 4:14. தேவன் இயேசுவை அனுப்பினார் என்று வேதம் சொன்னால் ஒரே நபரே தன்னைத்தானே அனுப்பிக் கொண்டார் என்று சொல்ல முடியுமா? பிதா தன்னை அனுப்பினார் என்று இயேசுவானவர் தெளிவாகக் கூறும்போது அனுப்பினவர், அனுப்பப்பட்டவர் இருவரும் ஒரே நபர் என்று எப்படி சொல்ல முடியும்? இயேசுவானவர், நானே பிதாவாயிருந்தேன், இப்பொழுது குமாரனாக வந்திருக்கிறேன், மீண்டும் சென்று மறுபடியும் பரிசுத்த ஆவியாக வருவேன் என்று எங்கும் சொல்லவில்லை.

அதற்கு பதிலாக இயேசுவானவர் பரிசுத்த ஆவியானவரை அனுப்பப் போவதாகக் கூறுகிறார். பிதா அனுப்புகிறார், யோவான் 15:26. குமாரனும் அனுப்புகிறார் [ யோவான் 16:7] அது மாத்திரமல்ல, என்னை அனுப்பினவரிடத்திற்குப் போகிறேன் என்று இயேசுவானவர் வெவ்வேறு சூழ்நிலைகளில் ஆணித்தரமாக சொல்லியிருக்கிறார், யோவா. 14:28;16;5, 28;20:17. மேற்கண்ட வசனங்கள்: பிதா, இயேசு, பரிசுத்த ஆவி இம்மூவரையும் மூவராகத்தான் விளக்குகிறது. ஒருவரே பிதாவாகவும், குமாரனாகவும், பரிசுத்த ஆவியாகவும் உருவம் மாறி வந்தார்கள் என வேதாகமம் எங்கும் கூறவில்லை.

ஒரு காரியத்தை நாம் திட்டமாக எண்ணிக் கொள்ள வேண்டும். பரலோகம் வேஷம் மாற்றிக் கொள்ளும் இடம் அல்ல.

இரண்டாவது, இயேசுவானவரும் பொய் சொல்ல வேண்டிய அவசியமில்லை. இயேசுவானவர் பேசியவை அனைத்தும் பிதாவின் வார்த்தைகள். அதில் ஒன்றும் அவர் மாற்றவில்லை. பரிசுத்த ஆவியானவரும் இயேசு கிறிஸ்துவினுடைய வார்த்தைகளை அப்படியே மாற்றாமல் அப்போஸ்தலர்களுக்கு அறிவித்தார், எண். 23:19;தீத்.1:3; யோவா.5:19;12:49,50;16:13–15;17:17.

B. ஒரே நபர் மட்டும் தேவத்துவத்தில் இருந்தால் ஒற்றுமை ஐக்கியம் போன்றவைகளுக்கு எப்படி உதாரணமாக சொல்ல முடியும்?

ஆண்டவராகிய இயேசுவானவர் சிலுவைக்கு செல்வதற்கு முன்பு, தேவனிடம் அதாவது பிதாவினிடம் ஜெபித்தார் இந்த ஜெபத்தில், நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறது போல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக் கொள்கிறேன். நாம் ஒன்றாயிருக்கிறது போல அவர்களும் ஒன்றாயிருக்கும் படி என்கிறார், யோவான் 17:21,22.

இதில் அவர்களெல்லாரும் என்பது யார் என்றால், அப்போஸ்தலர்கள் மற்றும் அவர்கள் வார்த்தையினால் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களும் என்று அர்த்தம். யோவா. 17:20.


ஆக, பிதாவும் குமாரனுமான கிறிஸ்துவும் ஒரே நபராக இருந்தால் அப்போஸ்தலர்கள் 12 பேரும் ஒரே நபராகத்தான் இருக்க வேண்டும். அது மாத்திரமல்ல, அப்போஸ்தலர் வார்த்தையினால் கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களும் கூட ஒரே நபராகத்தான் இருக்க வேண்டும். இப்படித்தான் வேதம் கூறுகிறதா என்றால் இல்லை.


முதலாம் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் [சீஷர்கள்] ஒரே இருதயமும் ஒரே மனமும் உள்ளவர்களாய் இருந்தவர்கள். இவர்கள் விசுவாசிகளாகிய திரளான கூட்டத்தார் என வேதம் கூறுகிறது அப். 4:32. இவர்கள் ஒரே நபர் அல்ல.

அதே போல அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்தியருக்கு எழுதும் போது, கிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு அழைக்கப்பட்டவர்கள் ஏக மனதும், ஏக யோசனையும் உள்ளவர்களாய் இருக்க வேண்டும் என எழுதுகிறார், கொரி.1:9,10.

ஆகையால், பிதாவும் குமாரர் இயேசு கிறிஸ்துவும் ஒன்றாய் இருக்கிறார்கள் என்றால் ஒரே நபராக இருக்கிறார் என அல்ல. நம்மால் வேறுபடுத்தி பார்க்கமுடியாத அளவிற்கு ஒற்றுமையாக அல்லது ஐக்கியமாக இருக்கிறார்கள் என்பது தான் உண்மை. இந்த ஒற்றுமை அல்லது ஐக்கியம் கிறிஸ்துவுக்குள் நாம் எப்படி ஒற்றுமை ஐக்கியத்துடன் இருக்க வேண்டும், நடக்க வேண்டும் என்பதற்கு உதரணமாயிருக்கிறது. ✝


## 12 வித்தியாசமான தலைப்புகளில் கைப்பிரதிகள் கிடைக்கும். தேவைக்கு எங்களைத் தொடர்பு கொள்ளவும்.

















# World Evangelism Gospel Media

Rajanayagam & Benny Martin On Tamilan TV
Every Saturday 7:00 - 7:30 am

Rajanayagam & Benny Martin On Nambikkai TV
Every Friday 7:30 - 8.00 am

Arjunan on Nambikkai TV
TV : On Monday & Saturday 7.30 - 7.45 pm

Hindi TV Program : Sunny, Francis & Vinay David Speaking
Sunday & Tuesday ( 7:00 - 7:30 ) pm on
Shubhasandesh Hindi Channel

P.K. Varghese In Malayalam :
Every Saturday 6:00 - 6:30 am on Jai Hind Channel TV

Philemon & Kingsley on Tamilan TV and Nambikai TV :
Every Sunday 6:45 - 7:00 am
Every Friday 6.00 - 6.30 am
Joy TV - Saturdays 9.00 pm Salvation TV - Every Sunday 2.00 pm

Joshua & Ricky Gootam In Telugu:
Every Saturday at 6:00 pm Subhavartha Channel
Every Wednesday at 6:30 pm on Rakshana Channel
Every Thursday at 11:00 am on Rakshana Channel
Satyavani T.V. online : www.sakthitv.in
Every Wednesday & Friday at 8.00 pm

For English Voice of Truth
Contact - Brothers Philemon or Kingsley
@ Po box 15 , 45/c1 Church Lane, Coronation Street,
Arasaradi, Madurai - 625016
9244204420 / 21, 0452 - 2607026



Regd. News Paper RNI No. TNTAM/2006/20446
Postal regn. No. Erode/26/2021 - 2023
Posted at Erode HPO on 20/21 of Every Month.
**Licensed to Post without pre payment**
**No: TN / WR / ERD / 03 / WPP / 2021 - 2023**
Published on 17/18 th of Every Month

# எங்களது இதர வெளியீடுகள்









சர்வதேச தரத்தில், தலை சிறந்த
பிரசங்கிகளால் எழுதப்பட்ட
**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
– ஆசிரியர்

**தபால் செலவிற்கு பணம் அனுப்பி இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்**




## திருமறை தியானம்

நம்பிக்கை தொலைக்காட்சியில்
வெள்ளி காலை 7:30 - 8.00 மணி
தமிழன் தொலைக்காட்சியில்
சனி காலை 7.00 - 7.30 மணி








## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு 7 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள்
மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.







இயக்குனர்
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு , இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.